# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்:0085/2016

ஆணை எண்:0139/2016

நாள்: 19/08/2016

திரு. S. பாண்டுரங்கன்,
111, சாமியார் கிணறு தெரு,
விருதுநகர். மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
விருதுநகர் நகராட்சி.
(மற்றும் பிறர்) எதிர் மனுதாரர்

## ஆணை

மனுதாரரால் இம்முறை மன்ற நடுவத்தில் 09.02.2016 அன்று தாக்கல் செய்யப்பட்ட முறையீடு, எண்.0085/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரது முறையீடு குறித்து பெறப்பட்ட வாக்குமூலம், அறிக்கைகள் மற்றும் விசாரணையின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

மனுதாரரது 06.02.2016 நாளிட்ட மேற்படி முறையீட்டில் விருதுநகர் நகராட்சியில் பொதுக் கோயில் சொத்தில் ஒருங்கிணைந்த குடியிருப்பு மற்றும் குடிசை பகுதி மேம்பாட்டுத் திட்டம் (IHSDP) 2008–2009–ல் போலியான ஆவணங்களைக் கொடுத்து அரசு மானியம் முறைகேடாக பெறப்பட்டுள்ளதாக சில நபர்கள் குறித்து புகார் எழுப்பப்பட்டது.

விருதுநகர், புல்லக்கோட்டை ரோட்டில் டவுன் சர்வே எண்.18/3–ல் நந்தவனம் ஏற்படுத்தி அதில் அருள்மிகு பாலகணபதி விநாயகர் கோயில் கட்டி மேற்படி சொத்துக்கள் அனைத்தும் மேற்படி கோயிலுக்கு 11/1930 நிர் நம்பராக திரு.வெள்ளையன் செட்டியார் என்பவரால் உயில் சாசனம் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதென மனுதாரர் தெரிவித்து அதன் நகலினையும் தாக்கல் செய்துள்ளார். மேற்படி நபருக்கு ஏழு பெண் வாரிசுகள் எனவும் தான் முதல் பெண் வாரிசின் வழிவந்த பேரன் எனவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி நபரின் பிறிதொரு பெண் வாரிசு வழிவந்த பேரன் / பேத்திகளான ஒரே குடும்பத்தைச் சேர்ந்த எட்டு நபர்கள் மேற்படி கோயிலுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை, தங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பது போல், உண்மையை மறைத்து போலியான ஆவணங்கள் கொடுத்து ஒருங்கிணைந்த குடியிருப்பு மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் 2008–2009–ன் கீழ் அரசு மானியம் பெற்று பயனடைந்ததுள்ளனர் என மனுதாரர் புகார் அளித்துள்ளார். மேலும், மேற்படி பயனாளிகளில் ஒருவரான திரு.சுப்பிரமணியன் என்பவர், தான் ஒரு அரசு ஊழியர் என்பதை மறைத்து பலனடைந்துள்ளாரெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி பயனாளிகளில் சிலரது கட்டிய வீடுகளுக்கு தாமதமாக வரிவிதிப்பு செய்யப்பட்டதால் நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதெனவும் புகார் அளிக்கப்பட்டுள்ளது. இப்பொருள் குறித்து விசாரணை செய்து சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரரால் கேட்டுக் கொள்ளப்பட்டது.

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களில் ஒன்றான உயில் சாசன நகல் பரிசீலிக்கப்பட்டது. மேற்படி உயிலில் திரு. வெள்ளையன் செட்டியார் அவர்களது காலத்திற்கு பின்னால் மேற்படி நந்தவனத்தையும் பாலகணபதி விநாயகர் கோயிலையும் நல்ல முறையில் பராமரித்திடவும், பொது மக்கள் உபயோகத்திற்காகவும் மற்றும் தர்மகாரியத்திற்காக மட்டும் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி சொத்தில் வீடுகட்டி கோயில் சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய யாருக்கும் எந்த உரிமையும் கிடையாதென மனுதாரரால் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறையீடு குறித்து அறிக்கை தாக்கல் செய்திடுமாறு விருதுநகர் நகராட்சி ஆணையருக்கு இம்முறை மன்ற நடுவத்தால் அறிவிப்பாணைகள் மூலம் ஆணையிடப்பட்டது. மனுதாரரால் அளிக்கப்பட்ட ஆதார ஆவணங்களில் ஒன்றான விருதுநகர், மல்லிப்புதூர் சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்ல கண்காணிப்பாளரது கடித எண்.(ஒ)359/அ/14 நாள்.15.04.2014–ன் படி பயனாளிகளில் ஒருவரான திரு.மா.சுப்பிரமணியன் பிப்ரவரி 2011 வரை சிறப்பு நிலை இடைநிலை ஆசிரியர் பதவியில் அரசு ஊழியராக பணி புரிந்துள்ளார் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் விருதுநகர் நகராட்சி அலுவலக கடிதம் நகல்.எண்.இ3/0754/14 நாள்.21.02.14–ன் மூலம் மனுதாரருக்கு அளித்துள்ள தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவுக்கான பதிலில் மேற்படி திட்டத்தின் கீழ் அரசு ஊழியர் பயன்பெற அனுமதி இல்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், விருதுநகர் நகராட்சியின் கடிதம் ந.க.எண்.2815/14/A2 நாள்.02.04.14-ல் மனுதாரர் குறிப்பிட்டுள்ள சொத்திற்கான வரிவிதிப்பு எண்கள் தொடர்பான வரிவிதிப்பு வெள்ளையன் செட்டியார் நந்தவனம் மற்றும் வெள்ளையன் செட்டியார் என்பருடைய பெயரிலும் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த குடியிருப்பு மற்றும் குடிசை பகுதி மேம்பாட்டுத் திட்ட (IHSDP) வழிகாட்டுதலில் உள்ள விதிமுறைகளில் திட்ட பயனாளிகள் பயன்பெறும் நில உரிமைப் பத்திரம் கணவன் அல்லது மனைவி பெயரில் அல்லது மேற்படி இருவரது பெயரில் இணைந்து இருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்தும் மனுதாரரால் முறையீட்டில் தெரிவிக்கப்பட்டு ஆவண நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்படி பயனாளிகளது விண்ணப்ப நகல்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேற்படி ஆவணங்களைப் பரிசீலித்ததில் அவற்றில் விவரங்கள் (பிறந்த தேதி) முழுமையாக பூர்த்தி செய்யப்படாத நிலை உள்ளதும் கண்டறியப்பட்டது.

இம்முறை மன்ற நடுவம் 11.03.2016 அறிவிப்பாணை மூலம் மனுதாரருக்கு 31.03.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டது. இதனிடையே விருதுநகர் நகராட்சி ஆணையரது 14.03.2016 நாளிட்ட அறிக்கை (ந.க.எண்.இ3/1109/16)வரப்பெற்றது.

மேற்படி அறிக்கையில் கீழ்க்கண்டவாறு விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

"விருதுநகர் நகராட்சி பகுதியில் குடிசைப் பகுதியில் வாழும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் மானிய உதவியுடன் 2008-2009-ம் ஆண்டில் வீடுகள் விரிவுபடுத்துதல் மற்றும் புதியதாக வீடுகள் கட்டிக்கொள்ள அனுமதிக்கப்பட்டது. இந் நகராட்சி பகுதியில் மேற்கண்ட திட்டத்தில் வீடு கட்டும் பணிகள் மேற்கொள்ள நகராட்சியால் விண்ணப்பம் வழங்கப்பட்டது என்றும் பயனாளி விண்ணப்பத்தில் வழங்கிய உறுதிமொழியின் அடிப்படையில் இந்நகராட்சி பகுதியான இந்திரா நகர் குடிசைப் பகுதியில் பயனாளிகளுக்கு வீடுகள் கட்டிக் கொள்ள நகராட்சியால் வேலை உத்தரவு வழங்கப்பட்டது. இத்திட்டத்தில் வீடு கட்ட மொத்த மதிப்பீடு ரூ.1,07,000/- ஆகும். இதில் மத்திய அரசின் மானியமாக ரூ.80,000/-ம் மாநில அரசின் மானியம் ரூ.13,000/- என மொத்தம் ரூ.93,000/- பயனாளிக்கு வழங்கப்பட்டுள்ளது. வீடு கட்டி முடித்த பயனாளிகளுக்கு மானியத்தினை பயனாளிகளின் வங்கி கணக்குகளில் செலுத்தப்பட்டது. அனைத்து தொகைகளும் வங்கி கணக்கில் வழங்கப்பட்டுள்ளது. இதில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது".

மேலும், அவ்வறிக்கையில் புகாரில் குறிப்பிடப்பட்ட எட்டு பயனாளிகளும் திரு.வெள்ளையன் செட்டியாரின் வாரிசுதாரர்கள் எனவும் வாரிசு சான்று இணைக்கப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட சொத்து யாவும் வெள்ளையன் செட்டியார் நந்தவனம் என்ற பெயரில் வரிவிதிப்பில் உள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயனாளிகளில் ஒருவரான திரு. சுப்பிரமணியன், த/பெ.மாணிக்கம் அரசு ஊழியராக இருந்தும் திட்டத்தில் பயனடைந்துள்ளார் என மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளதெனவும், உறுதிமொழி விண்ணப்பத்தில் தான் அளித்த விவரங்கள் யாவும் உண்மை என உறுதி தன்னால் அளிக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகாரில் குறிப்பிட்டுள்ள எட்டு பயனாளிகளும் அவ்விடத்தில் புதியதாக வீடுகள் கட்டி குடியிருந்து வருகின்றரெனவும், கோவில் சொத்து என மனுதாரர் குறிப்பிட்டுள்ள அதே சொத்தில் அவரும் புதியதாக வீடுகட்டி நகராட்சி மூலம் வரிவிதிப்பு பெற்றுள்ளாரெனவும், மேலும் மூன்று இடங்களை தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளாரெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மனுதாரரிடம் 31.03.2016 அன்று நடத்தப்பட்ட விசாரணையின் போதும் உறுதி செய்யப்பட்டது. போலி ஆவணங்கள் மூலம் மேற்படி எட்டு நபர்கள் பயனடைந்துள்ளதாக தனது வாக்குமூலத்தில் மனுதாரர் குறிப்பிட்டுள்ளனர்.

வருவாய் அலுவலர்களது குறிப்புகளின்படி மேற்படி புகாரில் குறிப்பிட்டுள்ள எட்டு பயனாளிகளின் வீடுகளும் அலுவலக சொத்துவரி பதிவேட்டின் படி வெள்ளையன் செட்டியார் நந்தவனம் என்ற பெயரிலேயே வரிவிதிப்பு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பயனாளிகள் உண்மைக்கு மாறாக ஆவணங்கள் வழங்கியுள்ளது நிரூபணம் செய்யப்படும் பட்சத்தில் அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை மேற்கொண்டு மானியத்தை திரும்பப்பெற நடவடிக்கை எடுக்கப்படுமென நகராட்சி ஆணையரால் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

பயனாளிகள் விண்ணப்பத்தில் அளித்துள்ள உறுதிமொழியின் அடிப்படையில் அரசு மானியத்துடன் கூடிய திட்டத்தில் வீடுகள் கட்டிக் கொள்ள நகராட்சியால் வேலை உத்திரவு வழங்கப்பட்டது என்ற நகராட்சி ஆணையரது பதில் ஏற்புடையதல்ல. மேலும், உண்மைக்கு மாறான ஆவணங்கள் என நிரூபணம் செய்யப்படின் மானியத்தை திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் முறையான பதிலாகவோ, நடவடிக்கையாகவோ கருதக கூடியதல்ல. பயனாளிகளை தேர்வு செய்யும் போதே தகுதியான பயனாளிகளை மட்டும் தேர்வு செய்வது என்பதே திட்டத்தின் நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கான அலுவலரின் முறையான சட்டப்பூர்வமான செயல்பாடாகும்.

நகராட்சி ஆணையரது அறிக்கையின் படி மேற்படி எட்டு பயனாளிகளுக்கு மத்திய அரசின் மானியமாக ரூ.80,000/–ம் வீதம் மொத்தம் ரூ.6,40,000/– மற்றும் மாநில அரசின் மானியமாக தலா ரூ.13,000/–ம் வீதம் மொத்தம் ரூ.1,04,000/–ம் என பெருமொத்தம் ரூ.7,44,000/–(ரூபாய் ஏழு இலட்சத்து நாற்பத்து நான்காயிரம் மட்டும்) செலவிடப்பட்டுள்ளது.

இம் முறைமன்ற நடுவத்தில் மனுதாரர் முறையீடு செய்த பின்பு அதன்மீது அறிக்கை கோரப்பட்டது. அப்போதாவது பதில் அளிக்கும் முன்பு விசாரணை மேற்கொண்டு உண்மையறிந்து சட்டபூர்வ நடவடிக்கை எடுத்து உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அறிக்கை சமர்ப்பித்திருக்கலாம். அதைவிடுத்து பொறுப்பற்ற முறையில் பொறுப்பினை தட்டிக் கழிக்கும் வகையில் பதில் அளித்திருப்பது தவறுகளை மறைப்பதற்கு நகராட்சி ஆணையர் துணை போகிறாரோ என்ற ஐயப்பாட்டிற்கு வழிவகுக்கிறது. இது குறித்து நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் தனது கடுமையான கண்டனத்தை தெரிவிக்கின்றது.

எனவே, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் 2014–ன்பிரிவு 12–ன் கீழ், திட்ட விதிகளின் படி ஆவணங்களைப் பரிசீலித்து, முறைகேடுகளிருப்பின் மேற்படி செலவினத் தொகை ரூ.7,44,000/– ஐ சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து (தலா ரூ.93,000/–) வசூலித்து உரிய

தலைப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டுமென ஆணையிடப்படுகிறது. மேலும், போலி ஆவணங்கள் மூலம் விதிகளுக்கு முரணாக பலனடைந்தமைக்கான உரிய சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனவும் ஆணையிடப்படுகிறது. மனுதாரர் மற்றும் புகார்தாரர்கள் கோயிலுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை ஆக்கிரமிப்பு செய்திருப்பின் அது குறித்து வருவாய் மற்றும் காவல்துறை உதவியுடன் ஆக்ரமிப்பினை அகற்றிடவும் சட்டபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் ஆணையிடப்படுகிறது. முறையாக ஆய்வு செய்யாமல் அந்த நிதியை தகுதியற்றவர்களுக்கு வழங்கிட காரணமான அனைவர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுத்திட நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

அரசு விதிகளின்படி சட்டப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதையும் அரசு மற்றும் நகராட்சிக்கான இழப்பீடு முழுவதும் சரிகட்டப்படுவதையும் கண்காணிப்பதுடன் அத்தகைய முரண்பாடுகள் மற்றும் விதிமீறல்களுக்கு பொறுப்பான அலுவலர்கள் மீதான துறைவாரியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதையும் இழப்பீட்டுத் தொகைக்கான வட்டித் தொகையுடன் சரிகட்டப்பட்டமை குறித்தும் உறுதி செய்து இம்முறை மன்ற நடுவத்திற்கு அறிக்கையினை இரண்டு மாதங்களுக்குள் அனுப்பி வைத்திட வேண்டுமென திருநெல்வேலி மண்டல நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் விருதுநகர் நகராட்சி ஆணையர் ஆகியோருக்கு ஆணையிடப்படுகிறது.

2016–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடப்பட்டு ஆணையிடப்படுகிறது.

ஒம்/...
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

(கையொப்பம்)

பெறுநர்:
1. திரு. S.பாண்டுரங்கன்,
   111, சாமியார் கிணறு தெரு,
   விருதுநகர் நகராட்சி, விருதுநகர் மாவட்டம் –1.
2. நகராட்சி ஆணையர்,
   விருதுநகர் நகராட்சி, விருதுநகர் மாவட்டம்.
3. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
   திருநெல்வேலி மண்டலம்.
4. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   விருதுநகர்.
5. நகராட்சி நிர்வாக ஆணையர்,
   எழிலகம், சேப்பாக்கம், சென்னை–600 005.